# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS. No. 150/2022 நாள்.23.10.2025**

PW1- திரு.வரதராஜன் த/பெ. திரு. அருணாச்சலம்

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் நீதிமன்றத்திற்கு வரும்போது நான் எனது மகனின் மருமகனுடன் வந்தேன் என்றால் இல்லை ஆட்டோவில் வந்தேன். அவர் என்னோடு வந்தாரா என்றால் இல்லை. வழக்குரையில் 2835 பலோபநந்தவனம் முகவரியைதான் வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.7 வழக்கறிஞர் அறிவிப்பில் அந்த முகவரிதான் உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.6 இல் அடமான பத்திரத்திலும் பாலோபநந்தவனம் முகவரி சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எனது மகனின் மருமகன் பூமிநாதன் பாலோபநந்தவனம் முகவரியில் இருக்கிறார் என்றால் இல்லை. நானும் என் மகன் கோவிந்தராஜன், எனது மகனின் மருமகன் பூமிநாதன் ஒரே முகவரியில் வசிக்கிறோம் என்றால் நான் அந்த முகவரியில் இல்லை. வழக்குரை தாக்கல் செய்தபோது அந்த முகவரி கொடுத்துள்ளேன் என்றால் மனைவி இறக்கும் வரை இருந்தேன்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.